# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக்கலைமாணித் தேர்வு – 2016/2017

## (July - 2019)

## ED 1212 கல்வியும் மனிதவள அபிவிருத்தியும்

## (Education and Human Resource Development)

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி **ஒன்றில்** இருந்து இரண்டு (02) வினாக்களையும், பகுதி **இரண்டில்** இருந்து இரண்டு (02) வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

(அ) மனிதவள அபிவிருத்தி என்பதனூடாக நீர் விளங்கிக்கொள்வதனை பொருளியலாளர்களின் நோக்குடன் தொடர்புபடுத்தி ஆராய்க. (10 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டிலுள்ள மக்களது திறன்களை விருத்தி செய்வதில் மனிதவள அபிவிருத்தியானது பெறும் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.(10 புள்ளிகள்)

(அ) இலங்கை கல்வியின் கல்விக்கொள்கை இலக்குகளைப் பட்டியற்படுத்துக.(04 புள்ளிகள்)

(ஆ) கல்வித்கொள்கை உருவாக்கத்தில் பின்பற்றப்படும் 3 அணுகுமுறைகளைக் குறிப்பிடுவதுடன் கல்விக்கொள்கை உருவாக்கப்படும் போது மாற்றத்திற்கு உட்படும் விடயங்களையும் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(இ) கல்விக் கொள்கையாக்கம், திட்டமிடல் என்பன கல்வி முறையில் இணைந்து செயற்படும் விதத்தினை பாய்ச்சல் வரிப்படத்தின் மூலம் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

(அ) கல்விச் சமூகவியலின் பயன்பாடுகள் எவ்வாறு மனிதவள அபிவிருத்தியில் செல்வாக்குச் லுத்துகின்றன என்பதை தற்காலப் பாடசாலைச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (10 புள்ளிகள்)

ஆ) 1972 ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தில் சமகல்வி வாய்ப்பினை வழங்கும் நோக்கில் முறைப்படுத்திய ஏற்பாடுகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

இ) இலங்கையில் சமகல்வி வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்காக அண்மைக்காலங்களில் கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளைப் படடியற்படுத்துக. (05 புள்ளிகள்)

## பகுதி II

04. (அ) முரண்பாடுகளினால் ஏற்படும் நிறுவன ரீதியான விளைவுகள் எவ்வாறு மனிதவள அபிவிருத்தியை தடைசெய்கின்றன என்பதை சிறந்த உதாரணங்களை முன்வைத்து விளக்குக

(10 புள்ளிகள்)

(ஆ) கல்விப் புலத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுக்கு எதிர்ப்புகள் உருவாவதற்கான காரணங்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

05. (அ) அழுத்தம் ஏற்படுவதற்கான தொழில்சார் காரணங்களின் 4 பிரிவுகளைக் குறிப்பிட்டு அவை எவ்வாறு ஒரு நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை மதிப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) ஆசிரியர்வாண்மை விருத்தி என்பதனூடாக நீர் விளங்கிக்கொள்வது யாது? (04 புள்ளிகள்)

(இ) இலங்கையில் ஆசிரியர் வாண்மை விருத்திக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நவீன மாற்றங்களைத் தெளிவுபடுத்துக.

(06 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு விளக்க குறிப்பு எழுதுக.

i. ஆசிரியர் ஒழுக்கக்கோவை

ii. 3T - ஆசிரியர் வகிபாகம்

iii. கட்டாயக்கல்வி

iv. கல்வியில் வீண்விரயம்

v. தொழிற்கல்வி

(4x7 ½=30)